# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1718/31 - 2011 අගෝස්තු 12 වැනි සිකුරාදා - 2011.08.12

*1718/31 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்

*3 (4) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 (4) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, துறைமுகங்கள் மற்றும் வீதி போக்குவரத்து விடயங்களுக்குப் பொறுப்புச்சாட்டப்பட்ட அமைச்சருடன் கலந்துரையாடி, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ரோஹண ராஜபக்ஷ ஆகிய நான், இந்த அறிவிப்பின் மூலம் -*

(1) மேற்படி சட்டத்தின் தேவைகளுக்காக நிர்மாணித்துச் செயற்படுத்திக் கையளிக்கும் (BOT) அடிப்படையில் கொழும்புத் துறைமுகத்தை விசாலமாக்கும் கருத்திட்டத்தின் கீழ் தெற்குக் கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கான கருத்திட்டத்தை செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் என இனங்காணப்பட்ட அறிவித்தல் 2011, ஏப்பிறல் 29 ஆந் திகதிய 1703/45 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது எனவும்

(2) 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி, நிர்மாணித்துச் செயற்படுத்திக் கையளிக்கும் (BOT) அடிப்படையில் கொழும்புத் துறைமுகத்தை விசாலமாக்கும் கருத்திட்டத்தின் கீழ் தெற்குக் கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கான கருத்திட்டத்தை செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் என பிரகடனப்படுத்துவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டது எனவும்

(3) மேற்படி செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம், "நிர்மாணித்துச் செயற்படுத்திக் கையளிக்கும் (BOT) அடிப்படையில் கொழும்புத் துறைமுகத்தை விசாலமாக்கும் கருத்திட்டத்தின் கீழ் தெற்குக் கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கான கருத்திட்டம்" எனப் பெயரிடப்பட்டு அழைக்கப்படும் என்பதோடு வரையறுக்கப்பட்ட கொழும்பு இன்டர்நெஷனல் கொன்டேனர் டேர்மினல்ஸ் கருத்திட்டக் கம்பனியாகும் எனவும்

இக்கருத்திட்டத்தின் மொத்த முதலீடு சுமார் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருப்பதோடு மேற்படி சட்டத்தின் பிரிவு 3 (2) இன் கீழ் 2011, ஏப்பிறல் 29 ஆந் திகதிய 1703/5 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் முன்னர் பிரசுரிக்கப்பட்ட முதலீடான 466.3 மில்லியன் அமெரிக்க டொலர் என்பது இத்தால் திருத்தப்படுகிறது என்பதாகவும் இங்கு குறிப்பிடப்படுகிறது.

(4) மேற்கூறிய கருத்திட்டம் பின்வருமாறு அமைவிடத்தில் கருத்திட்டத்தைச் செயற்படுத்தி வர்த்தகச் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் -

(அ) நிர்மாணித்துச் செயற்படுத்திக் கையளிக்கும் (BOT) ஒப்பந்தத்தில் வாசகம் 5.5 இல் குறிப்பிடப்பட்டவாறான பயனுறு திகதியில் இருந்து முப்பத்தொரு (31) மாதக் காலப்பகுதிக்குள் கருத்திட்டத்தின் I ஆம் கட்டத்தை ; மற்றும்

(ஆ) நிர்மாணித்துச் செயற்படுத்திக் கையளிக்கும் (BOT) ஒப்பந்தத்தில் வாசகம் 5.5 இல் குறிப்பிடப்பட்டவாறான பயனுறு திகதியில் இருந்து அறுபது (60) மாதக் காலப் பகுதிக்குள் கருத்திட்டத்தின் II ஆம் கட்டத்தை ஆரம்பிக்கும் எனவும்

(5) இக்கட்டளைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டங்கள் மூலமான விலக்களிப்புக்கள் கருத்திட்டக் கம்பனிக்கும் கருத்திட்டக் கம்பனியால் அனுமதிக்கப்பட்ட உப ஒப்பந்தக்காரர்களுக்கும் ஏற்புடைத்தாகும். சொல்லப்பட்ட விலக்களிப்புக்கள் காலாவதியாவதைத் தொடர்ந்து அக்காலத்தில் அமுலில் இருக்கும் வரிகள் ஏற்புடைத்தாகும் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

**அட்டவணை**

(அ) **2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்** :

கம்பனி வரி விதிப்பனவுக்கான இலாபத்தை ஈட்டும் முதல் ஆண்டு அல்லது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்த இரண்டு (02) வருடங்களின் பின்னால், அதில் எது முந்தி வருகிறதோ, அந்த ஆண்டு தொடக்கம் இருபத்தைந்து (25) வருடங்களுக்கு நிறுவக வருமான வரி விலக்களிப்பொன்று வழங்கப்படும். ஐயப்பாட்டைத் தவிர்ப்பதற்காக, மேலே விளக்கப்பட்ட இருபத்தைந்து (25) ஆண்டுகளின் முடிவின் பின்னர் கருத்திட்டத்தை அமுலாக்கும் கம்பனி தொடர்பில் அப்போது அமுலில் இருக்கும் பொதுவான வரிச் சட்டம் ஏற்புடைத்தாகும்.

மூலதனச் செலவுக்காகப் பெறப்பட்ட வெளிநாட்டு கடன் மீதான வட்டி மற்றும் கருத்திட்டத்தில் சேவைக்கமர்த்தப்பட்டுள்ள உசாத்துணையாளர்களுக்குச் செலுத்தப்பட்ட தொழில்நுட்பக் கட்டணம் ஆகியவை தொடர்பாக கருத்திட்டத்தை அமுலாக்கும் கம்பனிக்கு தடுத்து வைக்கும் வரி விலக்களிப்பு வழங்கப்படும் ;

இலாபங்களில் இருந்து பங்குதாரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட பங்கு இலாபங்கள் மீதான வரி சொல்லப்பட்ட இருபத்தைந்து (25) வருட வரி விலக்களிப்புக் காலப்பகுதியிலும் அதன் பின்னர் ஒரு (01) வருடத்துக்கும் காலப்பகுதிக்கு வருமான வரியில் இருந்து விலக்களிக்கப்படும் ;

கருத்திட்டக் கம்பனியின் ஆகக்கூடிய எண்ணிக்கையான வெளிநாட்டு ஊழியர்கள் இருபது (20) பேர்களுக்கு உ. நீ. செ. வரியில் இருந்து ஐந்து (05) வருடங்களுக்கு வரி விலக்களிப்பு ஏற்புடைத்தாகும்.

(ஆ) **2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர்பெறுமதி வரிச் சட்டம்** :

ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட திகதியில் இருந்து கருத்திட்டத்தின் செயற்பாட்டு/நிர்மாணக் காலகட்டம் அல்லது ஐந்து (05) வருடங்களுக்கு, அவற்றுள் எது குறைவாக உள்ளதோ அக்காலகட்டத்தில் கருத்திட்டம் தொடர்பான பொருட்களின் இறக்குமதி மற்றும் கருத்திட்டம் சம்பந்தப்பட்ட பொருட்களின் உள்நாட்டுக் கொள்வனவுகள் மற்றும் சேவைகள் மீது சேர்பெறுமதி வரி செலுத்தல் பிற்போடப்படும். சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் உட்பிரிவு (1) இன் பந்திகள் (ஆ) மற்றும் (இ) ஆகியவற்றின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட சேவைகள் உட்படும் பட்சம் சேர்பெறுமதி வரி செலுத்தல் பூஜ்ய வீதமாக்கப்படும். பூஜ்ய வீதத்துக்குட்படுத்தப்பட்ட சேவைகளை விடுத்து வேறு ஏதும் சேவைகள் மீது பொதுவான சேர்பெறுமதி வரி செலுத்தல் ஏற்புடைத்தாகும்.

(இ) **2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி விதிப்பனவுச் சட்டம்** :

கருத்திட்டத்தின் செயற்பாட்டு/நிர்மாணக் கட்டத்தின் போது ஏற்புடைத்தாகாது.

(ஈ) **2011 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டம்** :

நிர்மாணித்து செயற்படுத்திக் கைமாற்றும் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளவாறு கருத்திட்டத்தின் அமுலாக்க/நிர்மாண ஆரம்பத்தின் பயனுறு திகதியில் இருந்து அமுலுக்கு வரும்படியாக மொத்தம் ஏழு (07) வருடக் காலப் பகுதியொன்றுக்கு ஏற்புடைத்தாகாது.

(உ) **2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம்** :

கருத்திட்டத்தின் அமுலாக்கல் /நிர்மாணக் கட்டத்தின் போது கட்டிடக் கைத்தொழில் உத்தரவாத நிதிய விதிப்பனவைச் செலுத்துவது ஏற்புடைத்தாகாது ;

(ஊ) **(235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டம்** :

எதிர்மறை பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களைத் தவிர கருத்திட்டத்தின் தேவைக்காகப் பிரத்தியேகமாக கருத்திட்டத்தைச் செயற்படுத்தும் கம்பனியின் பெயரில் இறக்குமதி செய்யப்படும் சகல மூலதனப் பொருட்கள் தொடர்பிலும் சுங்கக் கட்டண விலக்களிப்பு ஏற்புடைத்தாகும். ஆயினும், அத்தகைய பொருட்கள் அளவிலும் தரத்திலும் உள்நாட்டுச் சந்தையில் கிடைக்காத பட்சம் எதிர்மறை பட்டியலில் உள்ள பொருட்கள் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

பசில் ரோஹண ராஜபக்ஷ, பா. உ.,
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2011, ஓகத்து 10.

8 - 686

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.